**அ.வ.எண். 70/2024**
**பி.வா.சா.1: சுதா**
**தேதி : 05.02.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சர்வே எண்.705/1 – ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது அது எங்களுடைய சொத்தும் அல்ல. சர்வே எண்.705/1 உங்களுடைய சொத்து அல்ல என்று எப்போது தெரியும் என்றால் பட்டா வாங்க சென்றபோது தாசில்தார் சொன்னார். 2022 ஜூன் மாதத்தில் பட்டா வாங்க சென்ற போது தெரியும். பத்திரத்தின் அடிப்படையில் நான் பட்டா மாற்றம் செய்ய சென்றேன். அதன்பிறகு பிழைத்திருத்தல் போட்டு அதில் பழைய சர்வே எண்.702 புதிய சர்வே எண்.799/13 என்று சரிசெய்து கொண்டோம். மேற்சொன்ன சொத்து 1980 சதுர அடி உள்ளது. அது நான் சுத்த கிரையம் பெற்ற சொத்து. வாதி வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் நீங்கள் மேற்சொன்ன பிழைத்திருத்தல் பத்திரம் தாக்கல் செய்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.799/13 ன் மொத்த சதுர அடி 1980, நீளம் கிழமேல் 33 அடி தென்வடல் 60 அடி ஆகும். நீங்கள் கூறுவதுபோல் மேற்சொன்ன சர்வே எண்ணின் அளவு இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன சர்வே எண்.799/13 ல் மொத்த சதுர அடி 1450 என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள தாவா சொத்தின் தென்புறம் கிருஷ்ணனுடைய பாக சொத்து உள்ளது என்று சொன்னால் சரியல்ல கிருஷ்ணன் மனைவி பெரியம்மாளின் சொத்து உள்ளது. நீங்கள் கூறுவது போல் பெரியம்மாளின் சொத்து இல்லை என்றும் கிருஷ்ணனின் பாக சொத்து தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன சொத்து 2002 ல் கிருஷ்ணனுக்கு பாகம் பிரிந்த சொத்து என்று சொன்னால் சரியல்ல. 15.01.2015 ஆம் தேதி அன்று என் தகப்பனார் இறந்தவிட்டார். என் தகப்பனார் இறக்கும் வரை நல்ல மனநிலையில் தான்

இருந்தார். என் தகப்பனார் மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். மாரடைப்பு ஏற்பட்ட போது நான் தான் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். மாரடைப்புக்காக என் தகப்பானார் மருந்து உட்கொண்டிருந்தார். சிவக்குமார், சண்முகம் ஆகியோர்களை எனக்கு தெரியும். சிவக்குமார், சண்முகம் இருவரும் உங்கள் தகப்பனார் எழுதிய உயிலில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் என் தகப்பனார் உயில் எழுதவில்லை அவ்வாறு உயில் எழுதாதால்தான் என் தகப்பனார் உயில் குறித்து என்னிடம் சொல்லவில்லை. உங்கள் தகப்பனார் தான் உயிலை எழுதிவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் சர்வே எண்.705 தவறாக உள்ளது என்று கூறியுள்ளார். அப்போது வங்கியில் பத்திரம் உள்ளது வங்கியிலிருந்து வாங்கி பிறகு தான் பிழைத்திருத்தல் செய்யமுடியும் என்று கூறியிருந்தார். உங்கள் தகப்பானருக்கு சர்வே எண்.705 தவறாக இருந்தது என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் சரியான முறையில் தான் உயில் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.05 18:45:54 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.